2010 ஏப்ரல் 28]

4. சென்னை, திருவொற்றியூர், கண் பார்வை பாதிக்கப்பட்ட சிறுமியின் சிகிச்சைக்கு உதவிய மாண்புமிகு துணை முதலமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

***திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தேர்தல் களத்தில் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக வர போட்டியிட்ட தொகுதியான சென்னை, திருவொற்றியூரைச் சேர்ந்த சுரேகா என்கிற 12 வயது சிறுமி, கண் நோயால் பாதிக்கப்பட்டு, அவர் மேல் சிகிச்சை செய்துகொள்ள முடியாத ஒரு துயரத்திற்கு ஆளானபோது, அந்தச் செய்தியை 'தினத்தந்தி'-யில் படித்து, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், அதற்கு ஆகிற முழுச் செலவையும் ஏற்று, பூரணமாக அந்தப் பெண், பார்வை பெறுவதற்கான வழிவகை வகுத்தமைக்காகவும் தனது சொந்த செலவிலே அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டதற்காகவும் என்னுடைய குடும்ப உறவுகளின் சார்பாகவும், அந்த ஏழை ஓட்டுநர் தொழிலாளியின் குடும்பத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) விருதுநகர் மாவட்டம், படுகொலை செய்யப்பட்ட கோவில் பாதுகாப்புப் பணிக் காவலரின் குடும்பத்திற்கு நிவாரணம் கோருதல்

திரு. தி. வேல்முருகன்: அதேபோல, இன்னொரு பிரச்சினை. விருதுநகர் மாவட்டத்தில், கோவில் பாதுகாப்புப் பணிக்குச் சென்றிருந்த ஒரு காவலர், அங்கு ரவுடிக் கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்த போலீஸ்காரருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர். பாதுகாப்புப் பணியில் இருந்த அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். காவலர் தன்னுடையப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டிருந்தபோதிலும், அந்த ரவுடிக் கும்பலால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். 2 பெண் குழந்தைகளுடன் தத்தளித்துக் கொண்டிருக்கிற அந்தக் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சம் வழங்கி,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

சேலம் இரும்பு ஆலைக்கு நிலம் கொடுத்தவர்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும், போதும் உங்கள் தரப்பில் சொல்லியாயிற்று. (குறுக்கீடுகள்) Steel Authority of India நிறுவனத்திற்கு, மற்ற மாநிலங்களில் நிலம் கொடுத்தவர்களுடைய வாரிசுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பணி வழங்குவதைப்போல, சேலம் இரும்பு ஆலைக்கும் நிலம் கொடுத்தவர்களின் வாரிசுகளுக்கும், முன்னுரிமை அடிப்படையில் பணி வழங்க வேண்டியது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. து. ரவிக்குமார் ஆகியோர் விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 9-45-க்கு பிறகு கொடுத்திருந்தால் அதெல்லாம் அறையில்தான் இருக்கும், Office-ல் இருக்கும். (குறுக்கீடுகள்) 9-45-க்குப் பிறகு கொடுத்திருக்கிறார் அவர். (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினரைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சரி, பிறகு பார்ப்போம். (குறுக்கீடுகள்) இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் யாரேனும் ஒருவர் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்.